# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 7 | குடியுரிமைக்கல்வி | நேரம் :- 2.00மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி - I

சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. பல குடும்ப அலகுகள் ஒன்றிணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அமைப்பு எது?
    1) குடும்பம் 2) சமூகம்
    3) சன சமூக நிலையம் 4) பாடசாலை

02. மூன்று தலைமுறைகள் அல்லது அதற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் பலரைக் கொண்ட குடும்பமாகக் கருதப்படுவது.
    1) விரிந்த குடும்பம் 2) கருக் குடும்பம்
    3) தனிக்குடும்பம் 4) உறவுக்குடும்பம்

03. கூட்டுக் குடும்பத்தின் சிறப்பம்சம் அல்லாதது எது?
    1) குடும்பத்தின் பலமும் சக்தியும் அதிகமாக காணப்படும்.
    2) பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வது இலகுவாக இருக்கும்.
    3) பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு தாய், தந்தையிடம் காணப்படும்.
    4) பிள்ளைகளுக்கு பெற்றோர்களினதும் ஏனைய உறுப்பினர்களினதும் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும்.

04. "அன்னை சொற்கேட்க வேண்டும் - தந்தை ஆணைக்கிணங்க வேண்டும்" எனும் பாடலை பாடியவர்.
    1) வாணிதாசன் 2) சுத்தானந்த பாரதியார்
    3) கண்ணதாசன் 4) சரவணாகையூம்

05. நாட்டுக்கு பொருத்தமான நற்பிரசையை முறையான கலைத்திட்டத்தினூடாக வளர்த்தெடுக்கும் நிறுவனம்.
    1) கோவில் 2) நூல் நிலையம் 3) பாடசாலை 4) சமூகமன்றம்

06. குற்றங்கள் புரிந்தவரை அடையாளம் காண்பதற்கு நடாத்தப்படும் பரிசோதனை.
    1) UFR பரிசோதனை 2) FBC பரிசோதனை
    2) TSH பரிசோதனை 4) DNA பரிசோதனை

07. கட்புல, செவிப்புல சாதனங்களுள் ஒன்றல்லாதது.
    1) தொலைக்காட்சி 2) வானொலி
    3) பத்திரிகை 4) நிலையான தொலைபேசி

08. ஓய்வை பயனுள்ள வகையில் கழிக்க நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய செயற்பாடு யாது?
    1) உறவினர் வீடுகளுக்கு செல்லுதல் 2) நண்பர்களுடன் உரையாடுதல்
    3) சிறந்த நூல்களை வாசித்தல் 4) திரைப்படம் பார்த்தல்



kalvi.lk

09. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.

1) சதுரங்கம் 2) கூடைப்பந்து 3) மேசைப்பந்து 4) பல்லாங்குழி

10. எமது உள்ளத்தில் ஏற்படும் எண்ணங்கள், உணர்வுகளை இவ்வாறு அழைப்பர்.

1) கவலை 2) மனவெழுச்சி 3) புன்னகை 4) கோபம்

11. உங்கள் தந்தையின் சகோதரியின் மகள் உமக்கு என்ன உறவு முறையாகும்.

1) தங்கை 2) மாமி 3) மச்சாள் 4) அக்கா

12. சிறிய தந்தையை குறிக்கும் சொல் அல்லாதது.

1) சித்தப்பா 2) தொட்டப்பா 3) சாச்சா 4) சின்னப்பா

13. பின்வருவனவற்றில் அழகியல் செயற்பாடு அல்லாதது எது?

1) சித்திரம் வரைதல் 2) நாடகப்பிரதி எழுதுதல்

3) முத்திரை சேகரித்தல் 4) இசைக்கருவிகள் இசைத்தல்

14. கொள்கலன்களில் அடைக்கப்பட்ட பொருட்களை வாங்கும் போது பிரதானமாக கவனிக்க வேண்டிய விடயம் எது?

1) நிகர எடை 2) காலாவதியாகும் திகதி

3) விலை 4) அடங்கியுள்ள கூறுகள்

15. பௌத்தர்களின் வழிபாட்டுத்தலமாக அமைவது.

1) விகாரை 2) பள்ளிவாசல் 3) தேவாலயம் 4) கோவில்

16. விளையாட்டில் ஈடுபடுவதனால் ஒருவரிடத்தில் விருத்தியடையும் பண்பு.

1) தோல்வியை ஏற்காமை 2) சோர்வாக இருத்தல்

3) தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல் 4) கட்டளைகளைப் பின்பற்றாமை

17. ஒருவர் மகிழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் அவரிடத்தில் வெளிப்படுத்தப்படும் பண்புகளில் ஒன்று.

1) கை நடுங்குதல் 2) முகம் சிவந்து போதல்

3) உடல் நடுங்குதல் 4) சிரித்தல்

18. மத வழிபாட்டுத்தலங்களின் அடிப்படை நோக்கமாக அமைவது.

1) நல்வாழ்க்கைக்கு இட்டுச் செல்லுதல்

2) மதரீதியான அறிவைப் பெற்றுக்கொடுத்தல்

3) அன்பு, அரவணைப்பு வழங்குதல்

4) தவறான வழியில் இட்டுச் செல்லுதல்

19. சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு எம்மிடம் இருக்கவேண்டிய பண்பு யாது?

1) பொறாமை 2) பலவீனம் 3) முன்கோபம் 4) தன்னம்பிக்கை

20. குழுவாகச் செய்யும் வேலைகளுள் ஒன்று.

1) சிரமதானம் 2) பூப்பறித்தல்

3) ஓவியம் வரைதல் 4) தேங்காய் பறித்தல்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

*(01)* *01)* நீர் வாழ்கின்ற மாவட்டம், மாகாணம் என்பவற்றைக் குறிப்பிடுக?

*02)* இலங்கையில் கூடுதலாக வாழ்கின்ற இனத்தவர்கள் யார்? அவர்கள் பேசும் மொழி எது?

*03)* நீர் வாழ்கின்ற பிரதேசத்தில் காணப்படுகின்ற சமூக அமைப்புக்கள் இரண்டு தருக?

*04)* கருக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என்பவற்றின் பிற பெயர்களைத் தருக?

*05)* சிறந்த நூல்களை வாசிப்பதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக ?

*06)* மனிதர்களிடம் காணப்படும் பலவீனங்கள் இரண்டு தருக?

(6 x 2 = 12 புள்ளிகள்)

*(02)* *01)* குடும்ப உறுப்பினர்களின் தன்மைக்கேற்ப குடும்பத்தின் இரு பிரிவுகளையும் தருக?

*02)* கருக்குடும்பம் எதிர்கொள்கின்ற சவால்கள் மூன்று தருக?

*03)* குடும்பம் ஒன்றில் பொதுவாகக் காணப்படுகின்ற சிறப்பியல்புகள் மூன்று தருக?

*04)* குடும்பமாக வாழ்வதனால் உமக்குக் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக?

(4 x 3 = 12 புள்ளிகள்)

*(03)* *01)* நீர் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள நடைமுறைப்படுத்த வேண்டிய நுட்ப முறைகள் மூன்று தருக?

*02)* ஒருவரைத் தனித்துவப்படுத்தும் அடையாளங்கள் மூன்று தருக?

*03)* குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் உங்களுக்குள் விருத்தியடைய வேண்டிய நற்பண்புகள் மூன்று தருக?

*04)* உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமானவையாக விளங்குபவை மூன்று தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

(04) 01) ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்கும் வழிகள் மூன்று தருக?

02) சமூக நன்மைக்கு காரணமாக அமையும் நிறுவனங்கள் மூன்று தருக?

03) விளையாட்டில் ஈடுபடுவதனால் விருத்தியடையும் பண்புகள் மூன்று தருக?

04) அழகிய செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக?

(4 x 3 = 12 புள்ளிகள்)

(05) 01) மன எழுச்சிகள் மூன்று தருக?

02) பொருத்தமற்ற மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் மூன்று தருக?

03) பதிலீட்டுப்பொருட்கள் என்றால் என்ன?

04) பொதி செய்யப்பட்ட பொருட்களில் காட்டப்பட வேண்டிய விபரங்கள் மூன்று தருக?

(4 x 3 = 12 புள்ளிகள்)

(06) 01) குடும்பத்தின் மூலம் உமக்கு கிடைக்கும் உரிமைகள் மூன்று தருக?

02) நற்பிரசை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய பண்புகள் மூன்று தருக?

03) உறவு முறைகளை விளிக்கப் பிரதேச ரீதியாகப் பயன்படுத்தப்படும் விளிப்புப் பதங்கள் மூன்று தருக?

04) பெற்றோருக்குரிய கடமைகள் மூன்று தருக?

(4 x 3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457